நிலநோக்கு இருமாதங்களுக்கு ஒரு முறை வெளியாகும் ஒரு சஞ்சிகையாகும். மனிதாபிமான ஸ்தாபனங்களின் கூட்டமைப்பினால் வசதிகள் வழங்கப்படும் சிவில் சமூகத்தின் செயற்பாடுகளை உள்ளடக்கியது

# நிலநோக்கு

இருமாதங்களுக்கு ஒரு முறை

2009 ஜுன்

மலர்-2 , இதழ் 3

விலை ரூபா - 50 00



## சர்வதேச வானியல் ஆண்டு

ப - 28

## மஹவிலச்சிய



## பூகோளத்தொடர்புள்ள கிராமம்

ப - 14



## சிறுவர்களை காப்போம்.

ப - 29



# இணையக் கிராமத் திட்டத்தின் கீழ் எழுச்சிபெற்றுள்ள மஹவிலச்சிய கிராமம்

மஹாவிலச்சிய கிராமத்தில் முதன் முறையாக இணையக்கிராமம் என்ற கருத்து பிறந்தது 2004ஆம் 1998 ஆம் ஆண்டு முதல் Horizon Lanka www. horizonlanka.org ஊடாக தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில கல்வியை வழங்கிவருவதுடன், எங்கள் சேவையை விஸ்தரிப்பதுடன் தனித்து சிறுவர்களை மாத்திரம் இலக்குப்படுத்தாது தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில்நுட்பத்தை பரந்த அளவில் பயன்படுத்துவதற்கான புதுமையான முறைகளையும் ஆராய்ந்து வருகிறோம்.

நாங்கள் ஏற்கனவே இந்த சிறார்களின் பெற்றோரை குறித்த காரியத்திற்காக அமைக்கப்பட்ட கனணி கற்கைகள், களப் பயணங்கள், கொழும்பில் தகவல் தொழில்நுட்ப கண்காட்சிகள், மற்றும் இன்னும்பிற நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியுள்ளோம். ஆனாலும், கிராமவாசிகள் அனைவரையும் செயற்பாட்டோடு தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில்நுட்ப முறையில் ஈடுபடுத்தும் ஒழுங்கமைக்கப்பட்ட திட்டமிடப்பட்ட நிகழ்ச்சியொன்று எங்களுக்கு தேவையாக உள்ளது. செயன்முறை நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை தயாரிப்பது தொடர்பில் எங்கள் ஊழியர்களுடனும், தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில்நுட்ப நிபுணர்களுடனும் முடிவுறாத கலந்துரையாடல்களை நடத்தியுள்ளோம். இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு கவர்ச்சிகரமான பெயர் ஒன்றை வைப்பதற்கு ஆலோசனை நடைபெற்று வந்த சந்தர்ப்பத்திலேயே, கலாநிதி பந்து ரணசிங்க எங்களை சந்தித்து, எங்கள் கற்கை முறை தொடர்பில் அறிந்து கொண்டு, எமது பொதுக்கொள்கையை முழுமையாக தெளிவுப்படுத்தக் கூடிய "நவீன இணையக் கிராமம;" என்ற பெயரை பிரேரித்தார். மஹாவிலச்சிய, நவீன இணையக் கிராமம் என்ற இலங்கை செயற்றிட்டம் www.horizonlanka.org ஜனவரி 2005 ஆம் ஆண்டு ர்ழசணைழெ டுயமெய நிலையத்தினால் உத்தியோகப்பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

நவீன இணையக் கிராமம் என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான தேவை

அபிவிருத்தி பிரச்சினைகளுக்கான



தீர்வினை எதிர்பார்த்துள்ள மக்கள் மத்தியில் பயன்பாட்டின் அனுகூலங்களை தரக்கூடிய சாதகமான மாற்றமொன்றை மஹாவிலச்சிய சமூகத்தில் அறிமுகப்படுத்துவதே இணையக் கிராம செயற்றிட்டத்தின் பிரதான நோக்கமாக அமைந்துள்ளது. விவசாயத் தகவல்கள், வானிலை எதிர்வுகூறல்கள், சந்தை தகவல்கள் போன்ற தகவல்களுக்கு சமூக வழிமுறையை ஏற்படுத்திக் கொடுப்பதன் ஊடாக கிராமவாசிகள் அறுவடை செய்தல் மற்றும் உற்பத்திகளை விற்பனை செய்வதுடன், வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். உலகம் முழுவதிலும் உள்ள தகவல்களை பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக்களை சிறுவர்களும், இளைஞர்களும் ஆதர்சமாக ஏற்றுக் கொள்வதுடன் கிராமத்தின் எல்லைகளை விஸ்தரிப்பதற்கும் துணைபுரியும். அத்துடன், நண்பர்களாயிருந்தாலும், உறவினர்களாயிருந்தாலும்,வர்த்தக தொடர்புகளிலிருந்தாலும் தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில்நுட்பம் கிராம மக்கள் மத்தியிலும், நாடளாவிய ரீதியிலும் சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்திக் கொடுப்பதையும் நாங்கள் மறுக்க முடியாது. சிறப்பாக இணைய சேவைகளின் சிறப்பான பயன்படுத்தலும், தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில்நுட்பத்தை உணர்ந்து கொள்ளல் மற்றும் பயிற்சிகள் என்பன சமூகத்தின் வாழ்க்கை தரத்தை முன்னேற்றுகின்றது. தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில்நுட்ப கற்கையூடாகவும், வீடுகளிலிருந்தே இணைய சேவைகளை பெற்றுக் கொள்ளும் வசதிகளும், தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில்நுட்ப மத்திய நிலையங்கள் மற்றும் அது சார்ந்த வேறு சேவைகள் மூலமாக சமூகத்தை உயர்வடையச் செய்வதே இச்செயற்றிட்டத்தின் இலக்காகவுள்ளது.

பிரதான திட்டம்

மஹாவிலச்சியவை நவீன இணையக் கிராமமாக அமைப்பதற்கு ஆறு பிரதான படிமுறைகள் பின்பற்றப்பட்டன.

1.உறவுநிலையை கட்டியெழுப்பல்.

இணையக் கிராமத்தை உருவாக்குவதற்கு முன்னர், Horizon Lanka நிலையம் உள்ளூர் நிறுவனங்களுக்கும், மக்களுக்கும் மத்தியில் உறவை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. உள்ளூர் பாடசாலைகள், ஆலயங்கள், பொலிஸ் அதிகாரசபைகள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் உள்ளூர் சமூகங்கள் ஆகியவற்றின் ஆதரவே செயற்றிட்டத்தின் வெற்றிக்கு காரணமாக உள்ளது. அவர்களின்றி இந்த செயற்றிட்டம் வெற்றிப் பெற முடியாது.

2.கருவிகளை பொருத்துதல்

ICTA எங்கள் ஆய்வுகூடத்திற்கான 5 கணனிகள், பதிவுசெய்யப்பட்ட Windows OS, Microsoft Office தொகுப்புக்கள் உள்ளடங்கலாக 10,000 அமெரிக்க டொலர்களை வழங்கியது. அத்துடன் மாதாந்த இணையப் பாவனைக்கான கட்டணங்களை வழங்குவதாக ICTA உறுதிமொழிவழங்கியதுடன், அதனை பின்பற்றியும் வருகின்றது. அத்துடன் Horizon Lanka வின் உறுப்பினர்கள் இருவருக்கு இந்தியாவின் சென்னையில் கல்விச் சுற்றுலாவிற்கான நிதியையும் வழங்கியது.

3.பயிற்சிகள் மற்றும் பயிற்சி பட்டறைகள்

கிராம மக்களுக்கு கற்றுக் கொடுக்கும் போது, எதனை கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் எங்கள் உறுப்பினர்களின் புரிந்துகொள்ளலை உறுதிசெய்ய வேண்டிய தேவையிருக்கின்றது. IDM





நிறுவனத்தின் உதவியுடன் Horizon Lanka வின் நான்கு உறுப்பினர்கள் குழு தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில்நுட்ப தகவல்களை முறையாக பரவச் செய்வதற்கான "பயிற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்குதல்" என்ற கற்கை நெறியில் கலந்து கொண்டது.

அதிக அளவிலான மாணவர்கள் தற்போது கல்விக் கூடத்திற்கு சமூகமளிக்கின்றனர். Adobe illiustrator, Photoshop மற்றும் Macromedia Dreamweaver போன்ற மென்பொருள் பயன்பாடு தொடர்பான அவர்களுக்கான பயிற்சிகள், பயிற்சிபட்டறைகள் ஊடாக வழங்கப்படுகின்றன. வரைபடம் மற்றும் இணைய வடிவமைப்பு தொடர்பில் அதிக ஆர்வமுள்ளவர்கள் அடிப்படை கனணி அறிவுடன் சித்தியடைய முடியும்.

## 4.தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில்நுட்ப கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

தற்போது Horizon Lanka தனது மாணவர்களுக்கான தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில்நுட்ப கல்வித் திட்டம் ஒன்றை கொண்டுள்ளது. தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில்நுட்பத்தின் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கக் கூடிய வகையில் வாராந்த கற்கைகள் நடைபெற்று வருகின்றன. சமூகத்திற்கான கல்வித் திட்டம் பயிற்சிகள் மற்றும் பயிற்சி பட்டறைகள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன. சமூகத்திற்கு இணையக் கிராமம் என்ற பொதுக் கொள்கையை அறிமுகப்படுத்தல், தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில்நுட்ப பயன்பாட்டின் ஊடாக அதனை இலகுபடுத்தி அனுகூலமான பலன்களை பெறுதல் என்பவற்றை இந்த கல்வித் திட்டம் இலக்காக கொண்டுள்ளது. சமூகத்தில் நடைமுறை ஆர்வத்தை மென்மேலும் அதிகரிப்பதுடன், மேலதிக கல்விகூட வசதிகளை வழங்குதல், அவர்களுடன் நெருங்கிய தொடர்புடைய நிறுவனங்களின் ஊடாக தகைமைப் பெற்ற பயிற்சிநெறிகளை வழங்குதல் ஆகியவற்றை எதிர்பார்ப்பாக கொண்டுள்ளது. தனிப்பட்ட ரீதியில் தொழிற்றுறை சார்ந்த விசேட தகவல்களை வழங்குவதையும் தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில்நுட்ப கல்வித் திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது.(உ-ம்: அவர்களுக்கு இலாபத்தை தரக்கூடிய விவசாயம், கூட்டுறவு.)

## 5.சமூகத்திற்கான வேறு சேவைகள்.

ை. பல்ஊடக நூலகம்

புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஒலி-ஒளி இறுவட்டு மற்றும் இலக்க ஒளித் தோற்றவட்டு, ஒலிநாடாக்கள், பதிவிறக்கம் செய்யக்கூடிய தரவு இறுவட்டுக்கள் மற்றும் துறைசார்ந்த உபகரணங்கள் என்பனவற்றை பல் ஊடக நூலகம் ஊடாக சமூகத்திற்கு இந்த திட்டம் வழங்குகின்றது. அத்துடன், தகவல் தேடுதல் தொடர்பில் கோரிக்கை விடுக்கப்படும் பட்சத்தில் அதற்கான சேவைகளையும் நிலையம் வழங்குகின்றது. இணைய பாவனை மற்றும் சர்வதேச வளங்களை பயன்படுத்துதலின் ஊடாக Horizon Lanka இந்த சேவைகளை சமூகத்திற்கும் வர்த்தர்களுக்கும் வழங்குகின்றது. அத்துடன், புலமைப் பரிசில்கள் வழங்குவோர், ஆய்வாளர்கள், கல்வியியலாளர்கள், தொழில்சார் வல்லுநர்கள், நிதியியலாளர்கள் என்பவர்களிடமிருந்து நூலகத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்த வளங்கள் மற்றும் ஆய்வுக்கு பலனளிக்கக் கூடிய சேவைகளையும் Horizon Lanka ஆவலுடன் வரவேற்கின்றது.

### ii. தொடர்பாடல்

அடிப்படை தொடர்பாடல் வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. தற்போது மஹாவிலச்சிய கிராமத்தில் நிலையான மற்றும் கையடக்கத் தொலைபேசி வலையமைப்புக்கள் அனைத்துமே பயன்பாட்டில் உள்ளன. 2006 ஆம் ஆண்டே முதலாவது கையடக்கத் தொலைபேசி சேவை Horizon Lanka ஊடாக மஹாவிலச்சிய கிராமத்திற்கு வழங்கப்பட்டது. கிராமத்திற்கு பிரதான கனணி ஆய்வுக் கூடம் மற்றும் meshவலையமைப்பு ஊடாக இணைய வசதிகள் வழங்கப்படுகின்றன. meshவலையமைப்பில் இருந்த பிரச்சினைகளும் சிறிது காலத்தின் பின்னர் சீராக்கப்பட்டன.

### iii. இலக்க முறை புகைப்படக் கலை

இலக்க முறை புகைப்படக் கலை, வரைபட வடிவமைப்பு மற்றும் இலக்க முறை கலையின் ஏனைய பயிற்சிகள் அனைத்துமே தற்போது இணையக் கிராம குழுவினால் வழங்கப்படுகின்றன. வள ஒப்பந்தங்கள் மற்றும் சர்வதேச வர்த்தகங்கள் ஊடாக இளைஞர்களின் திறமைகளை விஸ்தரிப்பதுடன், கிராமத்தில் வேறு தொழில் வருமான வழிகளை உருவாக்கவும் இந்த குழு திட்டமிட்டுள்ளது.

### iv. ஒளிப்பதிவு மற்றும் ஒளித் தொகுப்பு

ஒளிப்பதிவு மற்றும் அதனை தொகுப்பதற்கான அனைத்து உபகரண வசதிகளையும் Horizon Lanka தன்னகத்தே கொண்டுள்ளது.

எ. செயலக சேவைகள்

MS office வசதிகளை வழங்குவதன் ஊடாக Horizon Lanka வின் இணையக் கிராமம் பல்வேறு நிகழ்த்துக்காட்சிகளை உருவாக்கியுள்ளது. MS powerpoint மற்றும் Macromedia Flash clients போன்றனவும் தமது வர்த்தகத்திற்கு தேவையான நற்பயனளிக்கக்கூடிய நிகழ்த்துக் காட்சிகளை உருவாக்க உதவி புரிகின்றன. அத்துடன், கடிதம் மற்றும் ஆவணங்களுக்காக தட்டெழுத்து செய்வதற்கான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

### vi. இணையத்தளம் மற்றும் வரைவியல் வடிவமைப்பு

கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சாதகமான பூர்வாங்க வேலையாக இணைய வடிவமைப்பு காணப்படுகின்றது. வெளியிடங்களிலிருந்து இணைய வடிவமைப்பு ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளதன் மூலம் புதிய

வேலைவாய்ப்புக்களும் கிராமத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. புதிய ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்படுவதன் காரணமாக, இந்த திறனை சமூகத்தில் மேலும் வளர்த்து மாவட்டத்தில் மேலதிக பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த Horizon Lanka திட்டமிட்டுள்ளது.

### vii. ஆலோசனை சேவைகள்

இலங்கையின் கிராம சமூகங்களுக்கு தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில்நுட்பத்தை எடுத்துச் செல்வதனூடாக நிலையம் தன்னுடைய அனுபவங்களை பகிர்ந்து கொள்ளத் தயாராகவுள்ளது. கிராம அளவில் தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில்நுட்ப நிலையங்களை அங்குரார்ப்பணம் செய்வதற்கு இவ்வாறான ஆலோசனை சேவைகள் உதவிபுரியும்.

## 6.meshதொழில்நுட்பத்தை பயன்படுத்தல்

Meshதொழில்நுட்பத்தின் நற்பயன்களைப் பெறும் முதலாவது கிராமமாக மஹாவிலச்சிய காணப்படுகின்றது. ஆசிய பசுபிக் அபிவிருத்தி தகவல் நிகழ்ச்சித் திட்டத்திற்கும், என்டர்பிரைசஸ் டெக்னோலொஜிஸ் தனியார் நிறுவனத்திற்கும் நன்றிகள். Mesh தொழில்நுட்பம் கிராமம் முழுவதிலும் தமது வீடுகளிலிருந்தே இணையத்தை பயன்படுத்தும் வசதிகளை ஒழுங்கமைத்துக் கொடுத்துள்ளது. இந்த பூர்வாங்க பணிகளுக்கு ICTA உறுதுணையாக இருக்கின்றது.

Horizon Lanka சுமார் 50 வீடுகளில் கனணி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. மேலும் DIGITAL BUTTERFLIES செயற்றிட்டத்தின் அரைப்பங்கில் பங்குபற்றிய குடும்பங்களுக்கு கனணி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நிதியியலாளர்களையும் Horizon Lanka தேடி வருகின்றது http:/digitalbutterflies.wordpress.com. mesh தொழில்நுட்பம் கம்பிகளற்ற இணைய தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. Horizon Lanka வினால் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த இணைய தொடர்பை அது மேம்படுத்தியுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு http://www/apdip.net/projects/ictrnd/2004/L43-lk/proposal. ஐ தொடர்பு கொள்ளவும். எவ்வித சந்தேகமும் இன்றி meshதொழில்நுட்பம் இணையக் கிராமத்தின் பக்கபலமாக இருப்பதுடன், தனித்து ஒரு நபருக்காக அல்லாது குடும்பங்களுக்கு சேவையை பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகளும் இருப்பதனால் கல்வித் திட்டத்தை மேலும் விஸ்தீரணப்படுத்துவதற்கும் உதவுகின்றது. இது ஒரு நிகழ்ச்சி விசாரணை கற்கை கற்பித்தல் என்பதனால் வலையமைப்பு ஆரம்பிக்கப்பட்டு சில மாதங்களுக்கு சில தொழில்நுட்ப மற்றும் வேறு இடைஞ்சல்கள் காணப்பட்டன. நாங்கள் புதிய நிதிப் பிரேரணைகளை சமர்ப்பித்துள்ளதுடன், அவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் வலையமைப்பில் எஞ்சியுள்ள பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பிலான பிரேரணை குறித்து தற்போது கலந்தாலோசிக்கப்பட்டு வருகின்றது. புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது தற்போதுள்ள பிரச்சினைகள் மாத்திரம் தீர்க்கப்படாது புதிதாக கிராமத்தில் உள்ள 30 வீடுகளுக்கும் meshஇணைய வலையமைப்பு வழங்கப்படவுள்ளது.

இணையக் கிராமத் திட்டத்தின் பலன்கள்

மஹாவிலச்சியவை இணையக் கிராமங்களின் மாதிரியாக உருவாக்குவதில் கிடைக்கும் பலன்கள் எண்ணில் அடங்காதவை.

### 1.சிறுவர்கள்

கிராமத்தில் உள்ள சிறுவர்களை தகவல் தொழில்நுட்ப நிபுணர்களாக்கியதன் ஊடாக Horizon Lanka வின் பணிகள் வெற்றி நிலையை அடைந்துள்ளன. கிராமப் புறங்களில் உள்ள பொதுப் பாடசாலைகளில் வளங்கள் வெகுவாக குறைந்தே காணப்படுகின்றன. அதாவது தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில்நுட்பம் போன்ற பாடங்கள் கவனிக்கப்படவில்லை என்பதாகும். சிறுவர்களும் கனணியை உபயோகிப்பதோடு, இணைய வசதிகளையும் உபயோகிப்பதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதன் ஊடாக இந்த கருவிகளை பயன்படுத்துவதற்கான அறிவை அவர்கள் வளர்த்துக் கொள்வதுடன், நகர பாடசாலைகளில் உள்ள சிறுவர்களைப் போன்று அவர்களுடைய பணியின் தரத்தை உயர்த்திக் கொள்ள முடியும். வேறு பாடசாலைகளில் உள்ள சிறுவர்களுடன் தொடர்பாடலை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், சிறந்த புரிந்துணர்வை ஏற்படுத்த முடிவதுடன் வளங்களையும் பகிர்ந்து கொள்ள முடியும். Horizon Lanka பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் இன்னும்பிற நிறுவனங்களுக்கு கனணி மற்றும் இணைய வசதிகளை வழங்குவதனூடாக கிராமத்தில் உள்ள சிறுவர்களுக்கு நற்பலன்களை வழங்கி வருகின்றது.

### 2.ஆரோக்கியம்

உள்ளூர் வைத்தியசாலை, வைத்தியர்கள், தாதியர்கள், பிரசவத்தின் போது உதவும் பெண்கள் மற்றும் மருந்தகங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பாடல் தற்போது மிகவும் குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. சமூகத்தில் இந்த விசேட பிரிவு மிகவும் முக்கியமானது. நிலைய திட்டம் பாவித்த கனணிகளை வைத்தியசாலைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளதுடன் mesh இணைய வலையமைப்பு விரிவாக க்கப்படும்பட்சத்தில் வைத்தியசாலைக்கும் இணைய வசதிகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. சுகாதார பணியாளர்கள் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தும்பட்சத்தில், நேரம் வீணாவது குறைக்கப்படும். தகவல் பரிமாற்றத்தின் அளவை அதிகரிக்கச் செய்து மேம்படுத்தும். விசேடமாக நோயாளர்கள், வைத்தியர்களை சென்று பார்வையிடாது சுகாதார ஆலோசனைகளை இணையங்கள் மூலமே பெற்றுக் கொள்ள முடியும். மஹாவிலச்சிய

வைத்தியசாலையை, நகர வைத்தியசாலையுடன் இணைத்து தொலை மருத்துவ திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு நாங்கள் திட்டமிட்டுள்ளோம். தேவைப்படும்பட்த்தில் அரசாங்கத்தின் உதவியும் இதற்காக பெறப்படும்.



## 3.வங்கிசேவைகள்

வீடுகளிலிருந்து வங்கி கணக்குகளை சரிபார்க்கும் வசதிகளும் அந்த சமூகத்திற்கு கிடைத்துள்ளது. வங்கிகளுக்குச் சென்று நீண்ட வரிசையில் காத்திருந்து நேரத்தை வீணடிக்காது வங்கி வசதிகளை பெற்றுக் கொள்ள முடியும். இலங்கையில் உள்ள அதிக வங்கிகள் உடன்நிகழ்வு சேவைகளை வழங்கி வருகின்றன. அத்துடன் விசாரணைகளுக்கு மின்னஞ்சல்களை பயன்படுத்துவதனால், அனுராதபுரம் நகரத்திற்குச் சென்றும், தொலைபேசியூடாகவும் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கான நேரவீணடிப்பும் அவசியமற்றதாகியுள்ளது.

## 4.தகவல் சேவைகள்

தேசிய அனர்த்தங்கள், யுத்தம் அல்லது வரட்சி போன்ற மிக முக்கியமான சந்தர்ப்பங்களில் தகவல்களை உடனடியாக பெற்றுக் கொள்வதற்கும் பரவச் செய்வதற்கும் துணை புரிகின்றது. தற்போது இந்த தகவல்களை கிராமப் புறங்களுக்கு தெரிவிப்பதற்கு இயலாத சூழ்நிலை காணப்படுகின்றது. அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்தில் இருந்து பொது தகவல் பரிமாற்றுநர்களுமே தற்போது கிராமங்களை அடைய முடியும். எனினும், இந்த சமூகம் தாம் தனித்து விடப்பட்டதாக உணர்வதோடு, நாட்டின் ஏனைய பாகங்களில் நடைபெறுவதை அறிந்து கொள்ளவும் ஆர்வமுடையதாக காணப்படுகின்றது.

## 5. பொதுமக்கள்

கிராமங்களில் தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில்நுட்பம் பொதுமக்களின் நற்பலன்களுக்கு மிக முக்கியமானதாக இருக்கின்றது. விவசாயிகள் தற்போது மொத்த விற்பனைகள், வானிலை அறிக்கைகள் மற்றும் அறுவடையின் போது அவர்களுக்கு தேவையான வசதிகள் தொடர்பான வேறு தகவல்களை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. வேலையற்றோர், பல்ஊடக நூலக வசதி மற்றும் இணைய பாவனையூடாக வேலைவாய்ப்புக்கள் குறித்து அறிந்து கொள்ளலாம். தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில்நுட்ப அறிவு எதிர்காலத்தில் வேலை தேடும் போது நற்பலன்களையும் அளிக்கும். கிராமங்களுக்கு இடையிலான தொடர்பாடலும் அதிகரிக்கும். வீடுகளிலிருந்து இணையத்தை பயன்படுத்துவது மற்றும் அதை பயன்படுத்துவதற்கான அறிவின் ஊடாக, குடும்பங்கள் இணைய அஞ்சல் மற்றும் IP தொலைபேசி சேவைகளான skype போன்றவற்றின் மூலம் செலவுகளின்றியே தொடர்பாடலை மேற்கொள்ள முடியும்.

Horizon Lanka வின் இணையக் கிராம திட்டமானது தற்போது நாடளாவிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது

**நந்தசிறி வன்னிநாயக்க**



